**தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத்

தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) திணைக்களத்திற்கு முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் அவசியம் இல்லாமையால் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) உணவு ஆணையாளர் திணைக்களம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் அவசியம் இல்லாமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உணவைக் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல் கணக்கொழிப்புக் கணக்கில் உள்ள ரூபா 2,158,234 தொழிற்படு நட்டமானது நிதியேற்பாடு பெறப்பட்டதன் மூலம் மீளாய்வாண்டில் தீர்வு செய்யப்பட்டபோதும், அத்தீர்வானது முற்பணப் பெறுவனவாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்படவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - |
| (ஆ) | மேற்குறிப்பிடப்பட்ட அவதானிப்பின் பிரகாரம் நிதிச்செயலாற்றல் கூற்றில் கட்டு நிதிக்கணக்கு மீதி சாதகமான ரூபா 1,045,475 மீதியாக இருந்திருக்க வேண்டுமாயினும், அது சாதகமற்ற ரூபா 1,112,755 மீதியாகக் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரி இறுதிக் கணக்கு கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட முற்பணக் கணக்கு மீதி ரூபா 20,638,304 ஆகும். அது ரூபா 1,544,355 அதிகரித்தவாறு ரூபா 22,182,639 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிழை திருத்தத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரி இறுதிக் கணக்குக் கூற்றில் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 168,057,463 ஆகவிருந்தபோதும், அது ரூபா 145,464,733 குறைவாக ரூபா 22,592,730 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | பிழை திருத்தத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் |
| (இ) | மேற்படி அவதானிப்பின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் புள்ளி விபரம் உள்ளடக்கப்படாமையால் நிகர சொத்துக்களது பெறுமதி (சாதகமற்ற) ரூபா 147,419,158 ஆகியபோதும், அது எதிர்மறை மீதியான ரூபா 410,070 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - |
| (ஈ) | திணைக்களத்தின் காணி, கட்டிடம் என்பன 2018 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப்படாது மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் கணக்கிலிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2013 ஆம் ஆண்டின் பின்னர் கட்டிடங்கள் மற்றும் களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட ரூபா 353,426,143 மீளாய்வாண்டினது நிதிக் கூற்றுக்களில் நிதி சாரா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பவற்றினது பெறுமதியில் உள்ளடக்கப்படாதிருந்தது. | - மேற்படி - | எதிர்வரும் ஆண்டில் பிழைதிருத்தம் மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | திணைக்களத்தின் காணிகள் மற்றும் கட்டிடங்களது பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 0.7145 ஹெக்டேயர் காணி, கட்டிடங்களது பெறுமதி, 1.5 ஏக்கரிலான காணியும் கட்டிடமும், 8.42 ஹெக்டேயர் காணியும் கட்டிடங்களும் இருந்தன. அக்காணியையும் கட்டிடங்களையும் மதிப்பீடு செய்து அப்பெறுமதியை நிதி நிலைமைகள் கூற்றில் காட்டியிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | 2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு அறிக்கையில் வேயங்கொடை களஞ்சியக் கூட்டுத்தொகுதி 51 ஏக்கரில் அமைந்திருந்தது. அக்காணிகளதும் கட்டிடங்களதும் பெறுமதி ரூபா 350,470,000 எனக் கணிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதில் 10 ஏக்கர் (4.208 ஹெக்டேயர்) அரச நிறுவனங்களிலால் சுவீகரிக்கப்பட்டயைமால், 40 ஏக்கர் காணி மாத்திரமே திணைக்களத்திற்குச் சொந்தமாக இருந்தது. அதற்கமைய, நிதி நிலைமைக் கூற்றில் வேயங்கொடை களஞ்சியக் கூட்டுத்தொகுதியில் உள்ளடங்கிய அக்காணிகளதும் கட்டிடங்களும் மதிப்பிடப்பட்ட பெறுமதி பிழையற்றதாக இருக்கவில்லை. | திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளையும் கட்டிடங்களையும் மதிப்பீடு செய்து கணக்கிலிட வேண்டும். | மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டின் பிரகாரம் கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விலை மதிப்புத் திணைக்களத்தின் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் பிழை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | 2018 சனவரி 01 இல் உள்ளவாறான ஏனைய இயந்திரங்களினதும் உபகரணங்களினதும் பெறுமதி ரூபா 18.127,612 ஆகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டினது நிதிக் கூற்றுக்களில் அதனை ரூபா 3,455,744 ஆகக் காட்டியமையால் ஏனைய இயந்திரங்களினதும் உபகரணங்களதும் பெறுமதி ரூபா 14,671,868 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஆரம்ப மீதியைச் சரிவர சீராக்கல் செய்து கணக்கிலிட வேண்டும். | கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்ற ஏல விற்பனையின்போது அகற்றப்பட்ட மற்றும் ஏடுகளில் பதிவழிக்கப்பட்ட மீதிகளை இனங்கண்டு கணக்கீட்டுப் புத்தகங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமையால் இவ்வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. |

### 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகிய காசுப் பாய்ச்சலது பெறுவனவாக ரூபா 241,485,195 ஏற்பட்டிருந்தபோதும், அது ரூபா 230,385,933 ஆக ரூபா 11,099,262 குறைவாகக் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - |
| (ஆ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குச் செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சலின் வைப்புக் கொடுப்பனவாகிய ரூபா 23,915,197 காட்டப்படவில்லை. | - மேற்படி - | - |
| (இ) | முற்பணப் பணிகளுக்கான பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் முதலீட்டு நடவடிக்கைகளால் உருவாகிய காசுப் பாய்ச்சலில், உள்ளடக்கப்பட வேண்டுமாயினும், முற்பணப் பெறுவனவாகிய ரூபா 7,877,884 மற்றும் முற்பணக் கொடுப்பனவாகிய ரூபா 7,999,220 என்பன அதன் கீழ் காட்டப்படவில்லை. | - மேற்படி - | - |
| (ஈ) | கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் ஆளுக்குரிய வேதனம், செயற்பாட்டுச் செலவினம், உதவு தொகை, மாற்றங்கள், பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீட்டுச் சுவீகரிப்புகள் என்பவற்றின் பொருட்டு ரூபா 212,839,344 செலவிடப்பட்டபோதும், அப்பெறுமதியானது ரூபா 225,777,009 ஆக ரூபா 12,937,665 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - |

### 1.6.4 கொடுக்கல் வாங்கல்களை கணக்கொழிப்புச் செய்யும் முற்பணக் கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கீழ் அமுலாகிய உணவுக் கொள்வனவு மற்றும் விநியோக முற்பணக் கணக்கு 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முடப்பட்டு கணக்கொழிப்பு நடவடிக்கைகளுக்காகத் திணைக்களத்தின் அல்லது அமைச்சின் கீழ் கணக்கொழிப்புக் கூறு ஒன்றைப் பேணுமாறு 2003 டிசெம்பர் 10ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் அறிவுறுத்தியிருந்தது. 2019 மே 31 ஆந் திகதியளவிலும் கணக்கொழிப்புக் கூறு ஒன்று நியமிக்கப்பட்டதற்கான சான்று சமர்ப்பிக்கப்படவில்லை. அக் கணக்கொழிப்பு நடவடிக்கையை உணவு ஆணையாளர் மேற்கொண்டிருந்தார். எவ்வாறாயினும், 14 ஆண்டுகள் கடந்தும் கணக்கொழிப்பு நடவடிக்கைகள் முடிவடையாதிருந்ததுடன், அந்த நடவடிக்கைகள் முடிவடையும் நிச்சயமான தினமும் வெளியிடப்படவில்லை. | அமைச்சரலைத் தீர்மானத்தின் பிரகாரம் முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் நடைபெறவில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளின்போது ரூபா 1,072,198 பெறுமதியான 02 மோட்டார் வாகனங்கள் கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சிற்கும் கூட்டுறவு அமைச்சிற்கும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ் வாகனங்களை ஒப்படைத்து 15 ஆண்டுகளாகியும் ஒப்படைப்புப் பெறுமதியை அறவிடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளாததுடன், முன்னைய ஆண்டின்போது அப்பெறுமதி முறையான அங்கீகாரமின்றி திரண்ட இலாப நட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுமிருந்தது. | திரண்ட இலாப, நட்டக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கு முன்னர் முறையான அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. குறித்த பெறுமதியை அறவிடுவதற்கு நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டபோதும், அந்நிறுவனங்கள் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாததாலும் வாகனங்களைப் பயன்படுத்தும்போது தேய்மான அடிப்படையில் சொத்துக்கள் அகற்றப்படுவதலுமான கற்பனையின் அடிப்படையில் கணக்கொழிப்பு சபையினது தகவல்களைச் கண்டறிய முடியாத காரணத்தால் அங்கீகாரமின்றி திரண்ட இலாப, நட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2017 சனவரி 01 இல் உள்ளவாறு அமைச்சுக்கள் / திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த சமூக சேவைகள் | திரண்ட இலாப, நட்டக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கு முன்னர் முறையான | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நீண்டகால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும், |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர் வறட்சி உதவிப்பண கடன்பட்டோர் தொகையானது முறையான அங்கீகாரமின்றி முன்னைய ஆண்டின்போது திரண்ட, இலாப, நட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, திரண்ட நட்டம் அதிகரித்திருந்தது. | அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும். | நிறுவனங்கள் சிறந்தவாறு பதில் வழங்காமை, கொடுக்கல் வாங்கல்களது தகவல்களை அறிவதில் வசதியில்லாமை, கணக்கொழிப்புச் சபையினரின் தகவல்கள் இல்லாதிருந்தமை போன்றவற்றாலும் கணக்கொழிப்பு சுலபமாக நடைபெறுவதற்குமென இவ்வாறு செய்யப்பட்டது என அறியத் தருகின்றோம். |
| (ஈ) | மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களை அப்புறப்படுத்தும் கணக்குகளில் மீதி எதுவும் இல்லாதிருக்க, முன்னைய 4 ஆண்டுகளது சொத்துக்கள் தேறிய பெறுமதியை அப்புறப்படுத்தும் கணக்கில் செலவு வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களது தகவல்கள் பிழையின்றி உள்ளடக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஏறக்குறைய 14 ஆண்டு நீண்ட காலப்பகுதியின்போது இக்கணக்கு பிழையின்றி இல்லாதிருந்தமையினாலேயே கணக்கொழிப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்ய முடியவில்லை. முற்பணக் கணக்கில் உள்ள சொத்துக்கள் திணைக்களத்தால் பயன்படுத்தப்படுவதாலும் முற்பணக் கணக்குகளுக்குரிய நிலையான சொத்துப் பதிவேடு முறையாகப் பேணப்படாமையாலும் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென அறியத் தருகின்றோம். |
| (உ) | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 217,457,314 ஆகும். மீளாய்வாண்டின்போது கூட்டுறவுக் கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 645,170 அறவிடப்பட்டிருந்தது. மொத்தக் கடன்பட்டோரில் ரூபா 1,636,746 உணவு ஆணையாளரது அங்கீகாரத்துடன் பதிவழிக்கப்பட்டிருந்தது. ஏனைய கடனை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏனைய கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். கடனை அறவிடுவதில், தொடர் நடவடிக்கை எடுத்தல், முன்னேற்றத்தை மிளாய்வு செய்தல் என்பன நலிவு அடைந்திருப்பதாலும் கடனை அறவிடுவதற்காக சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முறையான ஆவணங்கள் இல்லாமையாலும் கடனை அறவிடுவது நலிவடைந்துள்ளது. எதிர்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களை அழைத்துக் கலந்துரையாடுவதற்கான |

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.6.5 கணக்களி உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டியமை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்களி உத்தியோகத்தர் பின்வரும் விடயங்களைச் சான்றுறுதிப்படுத்த வேண்டுமாயினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாடு தொடர்பாக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினைத் தயாரித்துப் பேணுவதாக பிரதான கணக்களி உத்தியோகத்தரும் கணக்களி உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டுவதுடன், அம்முறைமை ஆக்கபூர்வமானது என்பதை அவ்வவ்போது மீளாய்வு செய்வதன் மூலம் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும். அம் மீளாய்வுகள் எழுத்து வடிவில் அமைவதுடன் அவற்றின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவும் வேண்டுமாயினும், அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்ட கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். |

**1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| அவதானிப்பு | | | |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க நிதி மற்றும் ஊடக அமைச்சின் சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | திணைக்களத்தின் சகல சொத்துக்களது தகவல்களும் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட சொத்துக்களது தகவல்களும் கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு 2019 மே 31 வரை சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்த சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த அறிக்கையை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, உணவு ஆணையாளர் திணைக்களத்தில் கணஞ்சியப்படுத்தப்படுவதன் மூலம் திணைக்களம் அதற்கெனச் செலவழித்த ரூபா 11,474,219 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை 2019 மே 31 வரை மேற்கொள்ளப்படவில்லை. | குறித்த தொகை விரைந்து அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். வாழ்க்கைச் செலவு அமைச்சரவைத் துணைக்குழு வழங்கிய பரிந்துரைக்கமைய இக்களஞ்சியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்போது, 03 மாத காலச் சலுகை (வாடகையின்றி) வழங்கப்பட்டது. அக்காலப்பகுதியின்போது களஞ்சியப்படுத்தப்பட்ட அரிசியை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் கால நீடிப்பால் களஞ்சிய வாடகையைச் செலுத்த வேண்டியேற்பட்டது. அந்நிறுவனத்தை அழைத்து இப்பிரச்சினையைத் தீர்வு செய்வதற்கு எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற 2 உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 30,080 கடன் மீதி 5 ஆண்டுகளாக இருந்து வந்தது. அக் கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2004 ஆம் ஆண்டின் 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் போதுமானதாக இல்லை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் |
| (ஆ) | ஓய்வுபெற்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய 5 ஆண்டுகளைக் கடந்த கடன் மீதியாகிய ரூபா 213,581 சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தினது 4.2.4 மற்றும் 4.2.5 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2004 ஆம் ஆண்டின் 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் போதுமானதாக இல்லை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் |
| (இ) | 1999 முதல் 2014 வரை மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து வருமதியாக இருந்த 05 ஆண்டுகளைக் கடந்த ரூபா 397,366 | 2004 ஆம் ஆண்டின் 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் | உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் போதுமானதாக இல்லை |

| | | | |
|---|---|---|---|
| | கடன் மீதி தொடர்பாக தாபனவிதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | திட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் |
| (ஈ) | வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட 12 உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய 05 ஆண்டுகளைக் கடந்த ரூபா 449,850 கடன் மீதியை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2004 ஆம் ஆண்டின் 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் போதுமானதாக இல்லை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் |
| (உ) | வேலையை விட்டு விலகிய 16 உத்தியோகத்தர்களிடமிருந்து 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய 05 ஆண்டுகளைக் கடந்த கடன் மீதியாகிய ரூபா 910,474 அறவிடப்படுவதற்கு தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தினது 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2004 ஆம் ஆண்டின் 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் போதுமானதாக இல்லை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் |

### 2.3 வைப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வைப்புக் கணக்குகள் இரண்டினது ரூபா 89,863,823 கூட்டுத் தொகையுடைய வைப்பு மீதி 02 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருவதுடன், 571 ஆம் நிதிப்பிரமாணத்தின்படி அவ்வைப்புகளைத் தீர்வு செய்வதற்கோ அல்லது வருவாயிலிடவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளின் மூலமான எதிர்பார்த்த பெறுபேறு நிறைவேறாமையால் | தொலைநோக்கும் பணியும் நிறைவேற்றும் விதத்தில் கடமைகள் | தற்போதைய நிலைமைக்கேற்றவாறு தொலைநோக்கையும் |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் தொலைநோக்கையும் பணியையும் அடைய முடியவில்லை. | நிறைவேற்றப்பட வேண்டும். | பணியையும் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | திணைக்களத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றும் நோக்கில் பாதுகாப்பான அரிசிக் கையிருப்பைக் கொண்டிருப்பதற்கும் ஏற்றுமதி நோக்குடன் தேவையான நியமங்களுக்கேற்ப உள்ளூர் அரிசியைக் கொள்வனவு செய்யும் பணியை ஊக்குவிப்பதற்கும் வேயங்கொடைக் களஞ்சிய வளாகத்தில் 06 களஞ்சியங்களையும் சிராவஸ்திபுர, பூசா, மெத்தவத்த என்பவற்றில் உள்ள 05 களஞ்சியங்களை நவீனமயப்படுத்துவதற்கும் 2012 முதல் 2018 டிசெம்பர் 31 வரை ரூபா 380,262,779 செலவிடப்பட்டிருந்தது. எனினும், 2013 ஆம் ஆண்டில் செயற்பட்ட செயற்திட்டத்தினது வெற்றியைப் பகுப்பாய்வு செய்வதற்கு 5,400 மெற்றிக் தொன் இயலளவுள்ள 10 ஆம் இலக்க வேயாங்கொடைக் களஞ்சியத்திலிருந்த 668 மெற்றிக் தொன் அரிசிக் கையிருப்பு முடிவடைந்ததன் பின்னர் 2014 சனவரி 01 முதல் 2018 டிசெம்பர் 31 வரை திணைக்களத்திடம் எதுவித பாதுகாப்பு அரிசிக் கையிருப்பும் களஞ்சியங்களில் இருக்கவில்லை. | திணைக்களத்தின் பிரதான கடமைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரிசியைக் கொள்வனவு செய்கையில் உணவுத் திணைக்களம் நிதியேற்பாட்டை மேற்கொள்ளாமையால் சதொச மூலம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை இக்களஞ்சியங்களில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 22,500 மெற்றிக் தொன்னை களஞ்சியப்படுத்தக்கூடியவாறு வெயாங்கொடயில் 06 களஞ்சியங்களும் 15,390 மெற்றிக் தொன்னைக் களஞ்சியப்படுத்தக்கூடியவாறு சிராவஸ்திபுர, பூசா, மெத்தவத்த எனும் இடங்களில் உள்ள 05 களஞ்சியங்களும் நவீனமயப்பட்டிருந்தும், 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் இக்களஞ்சியங்களிலிருந்து அரசாங்கம் முறையான பங்களிப்பைப் பெற முடியாதிருந்தது. அவ்வாறே, 2019 ஆம் ஆண்டில் இக்களஞ்சியங்களை அதி கூடிய வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கும் அரசாங்க வருவாய்க்கான பங்களிப்பை பெறுவதற்கும் என திட்டம் தயாரிக்கப்படவில்லை. | களஞ்சியங்களை அதி கூடிய வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கும் அரசாங்க வருமானத்திற்காக பங்களிப்பைப் பெறுவதற்கும் திட்டமிடப்பட வேண்டும். | 2018, 2019, 2020 ஆம் ஆண்டுகளில் பகுதிவாரியாக நிதியேற்பாட்டைப் பெற்று இக்களஞ்சியங்களை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச் செயற்திட்டங்கள் 2020 ஆம் ஆண்டில் முடிவடையவுள்ளன. 2020 ஆம் ஆண்டிற்குப் பின்னர் எதிர்பார்க்கும் வேலைகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | திணைக்களத்தின் தொலைநோக்கு, பணிகள் மற்றும் 5 பிரதான பணிகளுக்கு அனுசரணையாகவும் அப்பணிகளை நிறைவேற்றுவதற்குமான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. திணைக்களத்தின் தொலைநோக்கை அடைவதற்கும் அரசாங்க வருமானத்திற்கும் பங்களிப்பைப் பெறுவதற்குமான விதத்தில் விஞ்ஞானபூர்வ களஞ்சியப் பயன்பாடு தொடர்பான திட்டம் அடங்கலாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | திணைக்களத்தின் பிரதான பணிகளுக்கு அனுசரணையாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | திணைக்களத்திற்குச் சொந்தமான அரிசிக் களஞ்சியங்களைப் பொருத்தமானவாறு பழுதுபார்ப்பது 2018 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்தது. திணைக்களத்தின் மனிதவளத்தைச் சிறந்த முகாமைத்துவத்துடன் பேணுவதற்கான நோக்கத்துடன் 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஊழியர்களுக்கான பயிற்சி உள்ளடக்கப்பட்டிருந்தது. தொலைநோக்கு பணிகள், பிரதான பணிகள் என்பவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வாகனங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திர சாதனங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்தலும் 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. |

### 3.2 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிடங்கள் களஞ்சியப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன'' எனும் அடிப்படையில் விலை மதிப்புத் திணைக்களத்தால் வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த பிளெக்பூல் ஸ்டோர்ஸ் இலக்கம் 01, 02, 03 என்பன களஞ்சியக் குத்தகையாளரால் உணவைக் களஞ்சியப்படுத்துவதற்கும் சுற்றுலா தங்குமிட வசதிக்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, 2018 சனவரி 25 ஆந் திகதி கைச்சாத்தான உடன்படிக்கையிலுள்ள நிபந்தனையின் பிரகாரம் இக்களஞ்சியங்களை உணவைக் | குத்தகை உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சங்கத்துடனான உடன்படிக்கை களஞ்சியத்தை வாடகைக்கு வழங்குவதற்கு மாத்திரமே. |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சியப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென நிபந்தனையிருந்தபோதும், குத்தகையாளர் அந்த நிபந்தனைக்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. | | |
| (ஆ) | விலை மதிப்புத் திணைக்களத்தினது விலை மதிப்பின் பிரகாரம் குத்தகையாளருக்குரிய காணி 6,426 சதுர அடியுடைய 3 களஞ்சியங்கள் என மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும், நேரடிப் பரிசோதனையின்போது குறித்த சங்கம் 9,135 சதுர அடியைப் பயன்படுத்தியிருந்தமை தெரிய வந்தது. | - மேற்படி - | சங்கத்துடனான உடன்படிக்கை களஞ்சியத்தை வாடகைக்கு வழங்குவதற்கு மாத்திரமே. |
| (இ) | திணைக்களத்துக்குரிய 09 களஞ்சியங்கள் 2014 செப்டம்பர் தொடக்கம் 2016 டிசெம்பர் 31 வரை லங்கா சதொச நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. இதனால் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,700,546 வாடகை நிலுவையும் நிலத்தில் பதித்துள்ள ராக்கைகளுக்கு அறவிடப்படவேண்டிய ரூபா 908,034 என மொத்தமாக ரூபா 22,608,580 பெறப்பட வேண்டியிருந்தது. | வாடகை நிலுவையை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | லங்கா சதொச நிறுவனம் 100 சதவீத அரச நியதிச்சட்ட நிறுவனமாகையால் இந்த வாடகை நிலுவையைத் தீர்வுசெய்வதற்கு முகாமைத்துவத்துடன் கலந்துரையாடப்படுகின்றது. |
| (ஈ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 09 களஞ்சியங்கள் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. களஞ்சியங்களை வாடகைக்கு வழங்குகையில் வைப்புப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 22,716,858 வாடகை நிலுவையாகவும் நீர் மற்றும் மின்சாரம் என்பவற்றிற்கு ரூபா 3,486,060 என மொத்தமாக ரூபா 26,202,918 அறவிடப்பட வேண்டியிருந்தது. | வாடகை நிலுவையை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. |

### 3.3 நட்டங்களும் இழப்புகளும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொண்டு அறவிடப்பட வேண்டிய அல்லது பதிவழிக்கப்பட வேண்டிய நட்டம் ரூபா 3,588,015,224 ஆகவிருந்தது. எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல் தொடர்பான கூற்றில் அது ரூபா 219,386,273 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணங்களுக்கேற்ப நடவடிக்கை மேற்கொண்டு நட்டங்களையும் இழப்புகளையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | மீளத் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு 07, பார்ன்ஸ் பிளேசில் உள்ள 1.5 ஏக்கர் காணியில் 08 கட்டிடங்கள் இருந்தமை கொ.8392 எனும் நில அளவையாளர் நாயகத்தின் அறிக்கை மூலம் உறுதியானது. 2007 மார்ச் 02 ஆந் திகதியன்று விலை மதிப்புத் திணைக்களம் அந்த 08 கட்டங்களதும் மாதாந்த வாடகை ரூபா 1,002,500 என மதிப்பீடு செய்திருந்தது. காணியில் உள்ள கட்டிடங்களைத் திட்டமிட்டு அகற்றாமையால் 2019 மே 31 ஆந் திகதியளவிலும் அச் சொத்து பயன்படுத்தப்படாதிருந்தது. | காணியும் கட்டிடங்களும் பொருளாதாரப் பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. நிலவும் பிரச்சினையைத் தீர்வு செய்ய முடியாதுள்ளது. |
| (ஆ) | 2014 செப்டம்பர் தொடக்கம் 2016 பெப்ரவரி வரை நெல் சந்தைப்படுத்தும் சபை பயன்படுத்திய கட்டிடத்தின் நீர்க் கட்டண வாடகை ரூபா 473,871 என்றும் அனைத் துரிமாக வழங்காவிடின் 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேசிய நீர் வழங்கல் சபை திணைக்களத்திற்கு அறிவித்திருந்தது. அத் தொகையை நெல் சந்தைப்படுத்தும் சபையிடமிருந்து அறவிட்டு தேசிய நீர் வழங்கல் சபைக்கு கொடுப்பனவு செய்வதற்குத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | குறித்த தொகையை நெல் சந்தைப்படுத்தும் சபையிடமிருந்து அறவிட்டு துரிதமாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பிரச்சினையைத் தீர்வு செய்ய முடியாதுள்ளதால் ஒப்படைக்க முடியாதுள்ளது. |
| (இ) | 2010 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவியில் பதில் கடமை ஆற்றிய அமைச்சின் சட்ட ஆலோசகருக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் கிராமிய பொருளாதார அமைச்சின் செயலாளரது 2017 மார்ச் 09 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 2017 மார்ச் 15 தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முறையான அங்கீகாரமின்றி 2017 மார்ச் 16 தொடக்கம் 2018 செப்டம்பர் 30 வரை சட்ட உத்தியோகத்தர் பதவியில் பதில் கடமை ஆற்றியமைக்காக திணைக்களம் ரூபா 101,158 கொடுப்பனவு செய்திருந்தது. | பதில் கடமை ஆற்றுவதற்கு முறையான அங்கீகாரத்தைப் பெற வேண்டும். | 2018.10.22 ஆந் திகதி அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அமைச்சிற்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக தெரியப்படுத்தப்பட்டது. |
| (ஈ) | இரசாயனப் பொருள் பயன்படுத்தப்படாமல் ஏறக்குறைய ஓராண்டிற்கு களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதன் பொருட்டு விஞ்ஞானபூர்வ களஞ்சியமாக நவீனமயப்படுத்தப்பட்ட வேயங்கொடை களஞ்சியக் கூட்டுத் தொகுதியின் 08 ஆம் இலக்க களஞ்சியம் உருளைக்கிழங்கை | விசேட நடவடிக்கைகளுக் கெனப் பழுதுபார்க்கப்பட்ட களஞ்சியம் வெளி நபர்களுக்கு | அக்களஞ்சியத்தில் ஐஸ்மன் டெக்னோலொஜீஸ் நிறுவனம் பொருத்தியிருந்த இயந்திரங்களும் மின்சார |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சியப்படுத்துவதற்கு நுகர்வோர் சங்கமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. 28,860 சதுரஅடி உடையதும் 5400 மெற்றிக்தொன்னை களஞ்சியப்படுத்தக் கூடியதுமான இக்களஞ்சியம் ரூபா 57,235,982 செலவில் விஞ்ஞானபூர்வ களஞ்சியமாக நவீனமயப்படுத்தப்பட்டிருந்தது. அக்களஞ்சியத்தில் அரிசியைக் களஞ்சியப்படுத்தப் பயன்படுத்தப்படாது உருளைக்கிழங்கை களஞ்சியப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்ட உருளைக் கிழங்கு பழுதடைந்தமையால் களஞ்சியத்தின் உள்ளே பொருத்தப்பட்டிருந்த இயந்திரங்களும் துணைப்பாகங்களும் நீர் உட்புகுந்தமையால் பழுதடைந்திருந்தன. இந்த இயந்திரங்களும் துணைப்பாகங்களும் பழுதடைந்து 06 மாதங்களாகியும் 2019 மே 31 ஆந் திகதியளவிலும் களஞ்சியத்தின் நட்டத்தை மதிப்பீடு செய்து நட்டத்தைத் தொடர்புடைய நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | வழங்கப்படுகையில் களஞ்சியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக கவனம் செலுத்தியிருக்க வேண்டும். | இணைப்புகளதும் தற்போதைய நிலைமை தொடர்பாக அறிக்கை ஒன்றைப் பெற்று அது தொடர்பாகப் பரிசிலீத்து உணவுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்குமாறு ஐஸ்மன் டெக்னோலொஜீஸ் நிறுவனத்திற்குப் பிரதி ஒன்றுடன் இன்ஜினியரிங் சென்டரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து பெறப்பட்ட பதிலையடுத்து குறித்த சேவைக்கான கிரயத்தைக் குறைக்குமாறு வேண்டியுள்ளோம். மேலும் சகல கட்டணங்களையும் COOPFED நிறுவனத்திடமிருந்து மீளளிப்புப் பெறுமாறும் கோரப்பட்டுள்ளது |
| (உ) | 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் சிற்றுண்டிச் சாலையைக் குத்தகைக்கு வழங்கிய நிறுவனம் மற்றும் நபர்களிடமிருந்து 2018 செப்டெம்பர் 30 ஆந் திகதியளவில் ரூபா 724,776 அறவிடப்பட வேண்டியிருந்தது. அதனை அறவிடுவதற்கு திணைக்களம் 2019 மே 31 வரை தவறியிருந்தது. | துரிதமாக நிலுவையை அறவிடுவதுடன் எதிர்காலத்தில் அந்நிலைமை ஏற்படாதவாறு பார்க்கவும் வேண்டும். | 2018 செப்டம்பர் 30 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவையில் ரூபா 36,192 அறவிடப்பட்டுள்ளது. 2019.05.30 உள்ளவாறு ரூபா 688,584 நிலுவையாக உள்ளது. சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. |
| (ஊ) | 2008 ஆம் ஆண்டில் அமுலாகிய மியன்மார் அரிசி விற்பனை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றிடமிருந்தது. ரூபா 1,442,300 அறவிடப்பட வேண்டியிருந்தது. | வெளி நபர்களுக்குக் களஞ்சியத்தை வழங்கும்போது காலவாரியாக குத்தகை வாடகையை அறவிடும் கிரமமான நடைமுறை இருக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் ரூபா 05 இலட்சத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று பயன்படுத்திய 03 களஞ்சியங்களுக்கு ரூபா 1,029,624 கூட்டுத் தொகையை அறவிடுவதற்கு 2008 ஆம் ஆண்டில் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோதும், 2019 மே 31 ஆந் திகதியளவிலும் குறித்த வாடகை நிலுவை வருவாயை அறவிட முடியாதிருந்தது. | வெளி நபர்களுக்குக் களஞ்சியத்தை வழங்கும்போது பொது சட்டங்கள், விதிகள் அடங்கிய கோவை தயாரிக்கப்பட வேண்டும். | சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. |
| (ஏ) | ஒறுகொடவத்த களஞ்சிய கூட்டுத்தொகுதியின் 02 ஆம் இலக்கக் களஞ்சியம் மற்றும் 12 ஆம் இலக்க களஞ்சியத்தின் 1/3 பங்கு, நிலத்தில் பதித்த ராக்கைகள் மற்றும் நிலத்தில் பதித்த 03 தராசுகள் என்பன கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கம் ஒன்றினது உப கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டுமிருந்தது. அவ்வாறாகக் களஞ்சியம் வழங்கப்பட வேண்டிய நிறுவனம், கால வரம்பு, காணியின் அளவு, கொடுப்பனவு வழங்கப்படும் விதம் என்பவற்றைக் குறிப்பிடப்படாது முறையற்ற கடிதம் ஒன்றின் அடிப்படையில் வைப்புப் பணமும் பெறப்படாது முறையற்றவாறு அக்கம்பனிக்குக் களஞ்சியம் வழங்கப்பட்டிருந்தது. அக்களஞ்சியத்தைக் கம்பனிக்கு வழங்கியமையால் திணைக்களம் இழப்பிற்குள்ளான களஞ்சிய வாடகை ரூபா 1,941,000 ஆகும். களஞ்சியம் வழங்கப்படுகையில் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து 10 ஆண்டுகளாக நிலுவையாக இருந்த தொகையும் அதனை அறவிடுவதற்கு தொடரப்பட்ட வழக்கு இணக்கத்திற்கு வராதுள்ளமையும் திணைக்களத்தால் கவனத்திற் கொள்ளப்படவில்லை. | வெளி நபர்களுக்குக் களஞ்சியத்தை வழங்கும்போது பொது சட்டங்கள், விதிகள் கோவை தயாரிக்கப்பட்டு முறையான உடன்படிக்கையில் ஈடுபட வேண்டும். | சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஐ) | வேயங்கொடை 02 ஆம் இலக்க களஞ்சியத்தின் குத்தகை உடன்படிக்கை நீடிக்கப்படாது வைப்புப் பணமின்றி 2011 முதல் 2016 வரை தனியார் கம்பனி ஒன்றிற்கும் 2018 சனவரி 01 முதல் 2018 டிசெம்பர் 31 வரை பிறிதொரு கம்பனிக்கும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2018 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் திணைக்களத்திற்கு அக்கம்பனிகளிடமிருந்து ரூபா 1,957,413 அறவிடப்பட வேண்டியிருந்தது. வாடகை செலுத்தப்படாமையால் விதிக்கப்பட்ட தண்டப்பணமாகிய ரூபா 1,196,460 முறையான அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | வெளி நபர்களுக்குக் களஞ்சியத்தை வழங்கும்போது பொது சட்டங்கள், விதிகள் கோவை ஒன்று தயாரிக்கப்பட்டு முறையாக உடன்படிக்கையில் ஈடுபட வேண்டும். | சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும். |